ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் 91வது அவதார தின விழா**
**ஓங்காரக்குடிலின் அதன் நிகழ்வு குறித்தும்**
**அந்த விழாவிற்குண்டான அருளாசி குறித்தும் இனிதே**
**மகான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து ஆசி விளக்கம்**

13.01.2026

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
ஆறுமுகப் பெருமானை தொழுதேற்றி
வரமென அரங்கமகா ஞானியர் யானும்
வழங்குவேன் எந்தனது 91வது அவதார தின விழா

2. இந்த நன்னாளில் ஓங்காரக்குடிலுக்கும்
ஓங்காரக்குடிலின் நிர்வாகத்திற்கும் தொண்டர் படைகட்கும்
இவ்விழா நாளில் என்னை நாடி வந்த
உலகோர்க்கும் இனிதே அரங்கன் யான்

3. அருளாசி தன்னை வரமாக இன்று வழங்குவேன்
ஆற்றல்பட என் விழாவில்
ஓங்காரக்குடிலின் நிர்வாகம் உயர்வுபட
எந்தன் ஆற்றலோடு இவர்கள் எடுத்த

4. இந்த விழா சிறப்பு
இவ்விழாவிலே அரங்கன் யான்
ஜோதியில் சூட்சுமமாய் பேராற்றலாய் நின்று
வந்த அன்பர்கள் அத்துணை பேருக்கும்

5. பரிபூரண ஆசியும் வரமும்
அனுகூலமும் தந்துள்ளேன்
உள்ளபடி இந்த நன்னாளில்
உயர்வுபட நிர்வாகமும் தொண்டர் பெருமக்களும்

6. செய்த தொண்டும் சேவையும் சிறப்பு
அன்னதானத்திலும் அரங்கன் யான் கலந்து
ஆற்றல்பட ஆசியும் அனுகூலமும் தந்துள்ளேன்
உள்ளபடி இந்தவித நன்னாளில்

7. உயர்வான இனிப்பு பிரசாதமாகவும்
அரங்கன் யான் கலந்து வந்த
மக்களுக்கெல்லாம் நாவில் சுவையாகவும்
அவர்கட்குள்ளே யானே ஞானமாகவும்

8. கலந்துள்ளேன் இந்த நன்னாளில்
ஆற்றல்பட இந்தவித நன்னாளில்
என் சீடனாம் ராம்குமார் கரம்பட
உலகோர்க்கு தீட்சையாகவும் ஆசியாகவும்

9. யான் இறங்கி அற்புதம் நிகழ்த்தியுள்ளேன்
உள்ளபடி இந்த விழா நன்னாளில்
என் சீடர் பெருமக்களெல்லாம்
இணைந்து எடுத்த இந்த விழாவை

10. அரங்கன் யான் மகிழ்வோடு
ஏற்றுக் கொண்டேன் இந்த விழாவில்
இன்னும் அன்பர் பெருமக்கட்கு
அளவிலா வண்ணம் வரம் ஈந்துள்ளேன்

11. மலேசியா புவியிலிருந்தும் அனைத்து பகுதியிலிருந்தும்
வந்த அன்பர்கட்கும் என் ஆசியும்
அனுகூலமும் பரிபூரணமாய் உண்டு உண்டு
மிகைபட இந்த விழாவில் அருளமுதின் மூலமும்

12. மேலான ஆசி அறிவுரைகள்
அருட்சொற்பொழிவு மூலமாகவும்
அரங்கன் யானே இறங்கி உலகோர்க்கு
விழிப்புணர்வும் வழிகாட்டலும்

13. உயர்வும் சிறப்பும் தந்துள்ளேன்
உள்ளபடி இந்த விழாவை
என்னொடு ஆறுமுகப் பெருமானும்
ஞானியர் கூட்டங்களும் மகா சக்திகளும்

14. வள்ளல் பெருமானே ஏற்றுக் கொண்டார்கள்
உள்ளபடி இவ்விழாவில் இன்னும்
இந்த செயல்பாட்டின் மூலம்
ஆங்கில இந்தவித புத்தாண்டு முதலாக

15. இந்த ஆண்டில் ஓங்காரக்குடிலின்
நிர்வாகத்தின் செயல்பாடுகளில்
பேரற்புதங்களும் வளர்ச்சிப் பணிகளாக
இன்னும் அளவிலா வண்ணம் மாற்றங்களும்

16. நிர்வாகத்திற்கும் அன்னதானப் பணிக்கும்
அனைத்து கிளை சங்கங்களுக்கும்
கிராம அன்னதானங்களுக்கும் வளர்ச்சிக்கு உண்டான
இளைஞர் படைகளையும் நல்ல

17. ஆர்வம் மிக்க பண்பும் நலமும்
குணநலமும் விசுவாசமும் கொண்ட
தொண்டர் பெருமக்களையும் இணைத்து
அரங்கன் யான் நிர்வாகத்தை பலப்படுத்துவேன்

18. அரங்கன் என் நோக்கம் வெற்றிகரமாக
இந்த பேருலகில் பூர்த்தியாக
பேரருள் புரிவேன் அன்னதனால்
இந்த விழாவில் உலகோர்க்கு

19. பேராசியும் அனுகூலமும்
அரங்கன் யான் தந்துள்ளேன்
அரங்க மகான் யான் அருளிய
ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி